بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 23, May 2014 (Tamil)

## சோதனையின்போது உறுதியாக நிலைநிற்பது அற்புதத்தை விட மேலானது !

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா ஆல இம்ரானின் 146 முதல் 149 வரையுள்ள வசனங்களையும் 170 முதல் 172 வரையுள்ள வசனங்களையும் ஓதினார்கள். அவற்றில் இறைவழியில் தியாகம் செய்வதன் முக்கியத்துவம் மற்றும் மகத்துவம் பற்றிக் கூறப்படுள்ளது. பிறகு ஹுஸுர் அவர்கள்கூறினார்கள்:**

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எத்தகைய மக்களை வழங்கி இருக்கிறான் என்றால் அவர்கள் தமது உறுதிமொழியின் உயிர்நாடியைப் புரிந்து வைத்திருக்கிறார்கள்; அவர்கள் தியாகங்களின் உயிர்நாடியைப் புரிந்து வைத்திருக்கிறார்கள்; அவர்கள் புரிவது மட்டுமல்லாமல், இந்தக் காலத்தில் அந்த தியாகங்களை நிலைநாட்டுபவர்களாவர். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். இக்காலத்தில் இதற்கு வேறெங்கும் உதாரணம் காணமுடியாது. தமது **செல்வத்தை** மார்க்கத்திற்காக தியாகம் செய்பவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்ற பொருள் தியாகம் செய்வதைப் பற்றிய கேள்வி எழுந்தால், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டம்தான் முன்னால் வந்து நிற்கிறது. **நேரத்தை** தியாகம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வரும்போது இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில்தான் மார்க்கத்திற்காக நேரத்தை தியாகம் செய்யும் உயர்ந்த முன்மாதிரிகள் காணப்படுகின்றன. **கவுரவத்தை தியாகம்** செய்யும் முன்மாதிரியைப் பார்க்க வேண்டுமென்றால், இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் அதற்கான முன்மாதிரி காணப்படுகிறது. இஸ்லாத்தை தப்லீக் செய்வதற்காக **வாழ்வை அர்ப்பணிக்கும் கோரிக்கை** எடுத்து வைக்கப்பட்டால் தூய மனம் கொண்டவர்கள் அந்த பணிக்காக தம்மை அர்ப்பணிப்பவர்களாக இருக்கிறார்கள். **உயிரை தியாகம்** செய்வதற்கான உண்மையான முன்மாதிரியைப் பார்க்க வேண்டுமென்றால், **அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாறு இந்த உண்மையான தியாகத்திற்கான முன்மாதிகளுக்கு முத்திரை பதித்திருக்கிறது.**

சுருக்கமாக, அல்லாஹ் கூறிய கட்டளைகளுக்கு ஏற்ப எந்த தியாகமானாலும் இறைவனுக்காக இருந்தால் அதற்கான முன்மாதிரியை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ் இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை உருவாக்கி இருக்கின்றான். இன்று அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எத்தகைய ஜமாஅத்தை வழங்கி இருக்கிறான் என்றால், அதன் பெரும் பகுதி செல்வத்தையும், உயிரையும், நேரத்தையும், கவுரவத்தையும் தியாகம் செய்யும் உயிர்நாடியைப் புரியக் கூடியதாக இருக்கிறது. மேலும் அதற்காக எல்லா நேரமும் ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் சிலர் குறை மதியின் காரணமாக ஒரு நம்பிக்கை கொண்டவரின் உயர்தகுதிக்கு உகந்ததாக இல்லாததை வெளிப்படுத்தி விடுகிறார்கள். அதனால் குறைவான தர்பிய்யத்தைப் பெற்ற அல்லது அறிவில் குறைந்தவர்கள் தேவைக்கு அதிகமான பாதிப்புக்குள்ளாகி விடுகிறார்கள். இந்த சோதனையான, கஷ்டமான காலம் மிக நீண்டதாக ஆகிக் கொண்டே செல்கின்றது என சிலர் எனக்கு எழுதியும் விடுகிறார்கள்.

கஷ்டங்கள், சோதனைகளின் காலம் நீண்டு கொண்டே செல்கின்றது; அல்லாஹ் சீக்கிரம் எளிமைக்கான வழிவகைகளை ஏற்படுத்துவானாக என்ற அளவுக்கு மட்டும் எண்ணம் செல்கிறதென்றால், அதில் எந்தக் குற்றமுமில்லை. ஏனெனில் இந்த சோதனைகள், கஷ்டங்கள் உச்ச கட்டத்தை அடையும்போது இறைதூதர் மற்றும் நம்பிக்கை கொண்டவர்கள் **'மதா நஸ்ருல்லாஹ்' (அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்!)**என்ற ஓசையை எழுப்புகின்றனர். (திருக்குர்ஆன் 2:215காண்க). அந்த துஆவையும் செய்கிறார்கள். ஆனால் அதனை வெளிப்படுத்துவது உலக தொடர்புகளின் பக்கமும், காரணிகளின் பக்கமும் விருப்பத்தை வெளிப்படுத்துவது நோக்கமாக

இருந்தால் அது நம்பிக்கை கொண்டவருக்கு அழகன்று. உதாரணமாக, எழுதக் கூடிய ஒருவர், 'பாகிஸ்தானில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது செய்யப்படும் கொடுமைகளை நாம் உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும் என்றும் **MTA** (எம்.டி.ஏ) – ன் பெரும் பகுதியிலும் இந்த கொடுமையைப் பற்றி ஒளிபரப்பு செய்து உலகத்திற்கு காட்ட வேண்டும்; மேலும் மற்ற வழிவகைகளையும் பயன்படுத்த வேண்டும்; உலகத்தில் அநீதிக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும் என்றும் எனக்கு எழுதினார்.

இது தொடர்பாக முதல் விஷயம் என்னவென்றால், நாம் இறை ஜமாஅத் ஆவோம் என்பது நமது வாதம் என்றால், பிறகு **இறைவனின் ஜமாஅத்துகள் உலக அரசாங்கங்கள் அல்லது உலக வகையிலான ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொள்வதில்லை** என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்; இறை ஜமாஅத்துகளின் முன்னேற்றத்தில் உலக உதவிக்கும் பங்கு இருக்கிறது அல்லது கை இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. உலக உதவிகள் நிபந்தனைகளின்றி, எவ்வித குறிக்கோளுமின்றி கிடைப்பதுமில்லை; அவர்களுக்கு முன்னால் ஏதாவதொரு வகையில் குனியாமல் கிடைப்பதில்லை. இந்த விஷயங்களை ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவரால் தாங்கிக் கொள்ள முடியாது. நம்பிக்கை கொண்டவரிடமிருந்து**'மதா நஸ்ருல்லாஹ்' (அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்!)**என்ற ஓசை எழுகிறதென்றால், அது அல்லாஹ்வின் முன்னிலையில் துஆவின் குரலாகும். (திருக்குர்ஆன் 2:215காண்க). நாம் சோதனைகள், கஷ்டங்கள் ஆகியவற்றின் காலகட்டங்களைக் கடந்து செல்லும்போது ஒவ்வொரு முறையும் அல்லாஹ்வின் முன்னால் குனிந்தவாறு அவனுடைய கருணையையும், அருள்களையும் வேண்டுகிறோம். அவனுடைய உதவியை வேண்டுகிறோம். அப்போது முன்னேற்றத்தின் புத்தம்புதிய வழிகள் நமக்கு முன்னால் திறந்து கொண்டே செல்கின்றன.

இந்த சோதனை ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு புத்தம் புதிய வழிகளைத் திறந்து கொண்டே செல்கின்றன. அதன் மூலம் புத்தம் புதிய படித்தரங்களை ஜமாஅத் கடந்து சென்று கொண்டிருக்கிறது. இதற்கு ஏறக்குறைய முழு உலகிலும் பரவி இருக்கின்ற அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உறுப்பினர்கள், 204 நாடுகளில் வாழும் அஹ்மதிகள் இன்று சாட்சியாக இருக்கின்றனர். எனவே ஒரு நாட்டில் சோதனைக்கான காலகட்டம் நீண்டதாகி விட்டது என்பதற்காக மட்டும் நாம் கவலை அடைந்து விடக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் அருள்கள் எந்த அளவுக்கு பரவிக் கொண்டிருக்கின்றன எனப் பாருங்கள். உலக காரணிகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்வியைப் பொருத்த அளவில் அது முற்றிலும் சரியானதாகும். அதை மேற்கொள்ளத்தான் வேண்டும். **காரணிகளை மேற்கொள்வதில் தடை இல்லை.** இன்னும் சொல்லப்போனால் அதை மேற்கொள்வதற்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. வெளிப்படையான வழிவகைகளை பயன்படுத்துவது முற்றிலும் தடுத்தப்பட்டதன்று. **அல்லாஹ்வின் அருளினால் எந்த எல்லைக்குள் இருந்தவாறு நாம் இந்த வெளிப்படையான காரணிகளை பயன்படுத்த வேண்டுமோ நாம் அந்த காரணிகளை பயன்படுத்த வேண்டும்; நாம் பயன்படுத்தவும் செய்கின்றோம்.** ஜமாஅத்தின் மீது எவ்வாறு கொடுமை இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் உலகிற்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். இன்று உலகம் ஒன்று சேர்ந்து இந்த கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்யாவிட்டால் கொடுமைகள் பரவிக் கொண்டே செல்லும் என்பதை நாம் அவர்களுக்குக் கூறிக் கொண்டிருக்கின்றோம். ஜமாஅத் பற்றிய கேள்வி அல்ல; மாறாக, எந்தவொரு மனிதனும் தப்பிக்க முடியாது. இந்தக் கொடுமைகள் பரவிக்கொண்டே செல்கின்றன. உலகம் தற்போது அதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் கூறிய பிறகும் கூட நாம் எந்தவோர் அரசையும் சார்ந்திருக்கவில்லை; மனித உரிமைக் கழகத்தையும் சார்ந்திருக்கவில்லை. மாறாக, நாம் இறைவனை சார்ந்திருக்கிறோம்.

எனவே நமது சிந்தனைக்கும், உலக வாதிகளின் சிந்தனைக்கும் இடையில் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. நாம் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்திருக்கின்றோம். **அந்த இமாமிடம் இறைவன் வெற்றிகளைப் பற்றிய வாக்குறுதிகளை வழங்கி இருக்கிறான்.** வெற்றிகளின் புதிய புதிய வாசல்கள் திறப்பதற்கான வாக்குறுதிகள் இருக்கின்றன. நான் கூறியது போன்று, **இந்தக் காட்சிகளை நாம் கண்டும் வருகிறோம். ஆனால் மற்றவர்களுக்கு இந்த வாக்குறுதிகள் இல்லை.** ஷியாக்களின் உதாரணத்தைக் கூறுகின்றார்கள். அல்லது மற்றவர்களின் உதாரணங்களைக் கூறுகிறார்கள் என்றால், (அதாவது இவர்களெல்லாம் போராட்டங்களை நடத்தத்தானே செய்கிறார்கள் எனக் கூறப்பட்டால்) அவர்கள் உலக போராட்டங்களை நடத்தி எங்கேயும் தமது நோக்கங்களைப் பெற்று விட்டதாக எனக்கு தெரியவில்லை. ஆயினும் எல்லா இடத்திலும் பொருள்களை உடைப்பது, எரிப்பது ஆகியவை கண்டிப்பாக நடைபெறுகிறது. மேலும் அதன் காரணமாக இன்னும் அதிகமாக குழப்பங்கள் பரவிக் கொண்டிருக்கின்றன.

இங்கு நாம் இன்னொன்றையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது பாகிஸ்தானில்

அல்லது மற்ற நாடுகளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது அரசாங்கத்தின் சார்பாகவோ அல்லது மற்றவர்கள் சார்பாகவோ சட்டத்தை துணையாகக் கொண்டு அல்லது வேறு எந்த வகையிலும் செய்யப்படும் கொடுமைகள் இன்று உருவானதன்று. இது ஒன்றும் இரண்டு மூன்று அல்லது பத்து ஆண்டுகளில் நடக்கின்ற விவகாரமல்ல. **இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தம்மை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என வாதம் புரிந்த காலத்திலிருந்தே - ஒரு ஜமாஅத்தை நிறுவிய காலத்திலிருந்தே நடக்கின்ற விவகாரமாகும்.** அன்னாருக்கும் ஜமாஅத்திற்கும் ஆரம்பத்திலிருந்தே அநீதிகள் மற்றும் கடுமைகள் ஆகியவற்றை கடந்து செல்ல வேண்டியதிருந்தது. இன்னும் சொல்லப்போனால், நீண்ட காலமாக அன்னாருக்கு தமது மூதாதையர்களின் சொந்த ஊரான காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வரும் என்ற எண்ணம் தோன்றும் அளவிளான ஒரு சந்தர்ப்பமும் வந்தது. அன்னார் அங்கேயும் பாதுகாப்பாக இருக்கவில்லை. மாறாக, இதையும் கடந்து நாம் மேலே சென்று பார்க்கும்போது **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எல்லா காலகட்டத்திலும் எதிரிகளின் சார்பாக அநீதிக்கு மேல் அநீதியைக் கண்டவாறு அவர்கள் கடந்து சென்றார்கள்.**

அன்னார் (ஸல்) எல்லா விவகாரங்களிலும் உலகிற்கு ஒரு முன்னுதாரணத்தை நிலைநாட்ட வேண்டியதிருந்தது. அன்னாரின் தோழர்களும் தியாகங்களின் முன்மாதிரிகளைக் காட்டினார்கள். ஏனெனில் இறைவனது வாக்குறுதிகள் மற்றும் அவனது போதனைகளின் மீது அவர்களின் பார்வை இருந்தது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழலாக வர வேண்டியதிருந்தது. எனவே அவர்களும் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, என்னுடனும் என்னை ஏற்றுக் கொண்டவர்களுடனும் இந்த அநீதி, வரம்பு மீறுதல் நடக்க விருந்தது என்பதையே கூறினார்கள். துன்பங்களின் காலகட்டங்கள் வரும் எனவும் எனது வழி பூக்களைக் கொண்ட மேடை அல்ல; முட்களின் மீது நடக்க வேண்டியது வரும் எனவும் கூறினார்கள். அன்னார் எவரையும் ஏமாற்றவில்லை. அஹ்மதிய்யத்தில் இணைகின்ற ஒவ்வொருவரும் துன்பங்களை தாங்கிக் கொள்ள வேண்டியது வரும் என்பதைப் புரிந்துதான் இதில் இணைகின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லதீஃப் சாஹிப் அவர்களிடம் (காபூல்) மன்னர், நீர் ஏற்றுக் கொண்டிருக்கின்ற மஸீஹை மறுத்து விடும்; அதன் விளைவாக நான் உமது உயிரைக் காப்பாற்றி விடுவேன் என மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறினார். அவ்வாறு பேராசை ஊட்டியபோது **ஹஸ்ரத் சாஹிப் ஸாதா சாஹிப் அவர்கள், இன்று இறைவனின் அருளுக்கு என்னை வாரிசாக்குகின்ற மரணத்தை இறைவன் எனக்குத் தருகின்றான் என்றால் அதை நான் இந்த உலகத்திற்காக ஏன் மறுக்க வேண்டும்?** நூதமான முட்டாள்தனமான கேள்வியை நீர் என்னிடம் கேட்கின்றீர். அல்லது முட்டாள்தனமான வியாபாரத்தை என்னுடன் செய்ய விரும்புகிறீர் எனக் கூறினார்கள். ஆக, இதுதான் நம்பிக்கை கொண்டவர்களின் மகத்துவமாகும். அவர்களைப் பற்றியே அல்லாஹ் கீழ்வரும் வசனத்தில் கூறுகிறான்:

''அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தின் காரணமாக அவர்கள் ஒருபோதும் பலவீனமடையவில்லை. மேலும் அல்லாஹ் பொறுமை காட்டுபவர்களுடன் இருக்கின்றான்.'' **(3:147)**

அவர்கள் பலவீனம் காட்டவில்லை; எதிரிகளுக்கு முன்னால் குனியவில்லை. இன்றும் நமது எதிரிகளுக்கு, இவர்கள் ஏன் பலவீனம் காட்டுவதில்லை; இவர்கள் ஏன் நமக்கு முன்னால் மண்டியிடுவதில்லை என்ற இதே துன்பம்தான் இருக்கிறது. ஆனால் ஓர் அஹ்மதி முஸ்லிமின் பார்வை எல்லா நேரமும் இறைவன் மீது இருக்கிறது; அவர் எல்லா நேரமும் இறைதிருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்கிறார் என்பது அந்த எதிரிகளுக்குத் தெரியாது. அல்லாஹ் தனது திருப்தியைப் பெறுவதற்காக இங்கு ஒரு துஆவையும் கற்றுத் தந்திருக்கின்றான். அதாவது, **நீங்கள் உறுதியாக நிலைபெற்றிருப்பதற்காக எப்போதும் துஆ கேட்டுக் கொண்டிருங்கள். ஏனெனில் ஈமானின் உறுதி என்பது இறைவன் மூலமாகவே கிடைக்கிறது.** இது தொடர்பாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எவர்கள் எங்களுடைய இறைவன் அல்லாஹ் என்று கூறி பொய்கடவுள்களை விட்டு தனித்து விட்டார்களோ பின்னர் உறுதியாக நிலைநின்றார்களோ (அதாவது பலவிதமான சோதனைகள், துன்பங்களின் நேரத்தில் உறுதியாக நிலைநின்றார்களோ) அவர்கள் மீது வானவர்கள், நீங்கள் அச்சப்படாதீர்கள்; கவலைப்படாதீர்கள். மகிழ்ச்சியாக இருங்கள். உங்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட அந்த மகிழ்ச்சிக்கு நீங்கள் வாரிசாக்கப்பட்டுள்ளீர்கள். இந்த மகிழ்ச்சியில்

நீங்கள் மனநிறைவு கொண்டு விடுங்கள். நாங்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் உங்கள் நண்பர்களாவோம் எனக் கூறியவாறு இறங்குகின்றனர்.(திருக்குர்ஆன் 41:31,32 காண்க). உறுதியாக நிலைபெற்றிருப்பதால் இறைதிருப்தி கிடைக்கிறது என இந்த இடத்தில் இந்த வார்த்தைகளில் சுட்டிக்காட்டி இருக்கிறான். **'அல் இஸ்திகாமத்து ஃபவ்க்குல் கராமத்'**(உறுதியாக நிலைபெற்றிருத்தல் என்பது அற்புதத்தை விட மேலானது) என்பது உண்மைதான். முழுமையான இஸ்திகாமத் (நிலைபெற்றிருத்தல்) என்பது நாலாப்புறமும் சோதனைகள் சூழ்ந்திருக்கக் கண்டு, இறை வழியில் (தனது) கண்ணியத்தையும், கவுரவத்தையும் அபாயத்தில் கண்டு, ஆறுதல் அளிக்கக் கூடிய எவ்வித விஷயமும் இல்லாதிருந்து - எதுவரை என்றால், ஆறுதல் வழங்கக் கூடிய ஆன்மீகக் கனவு அல்லது இறையறிவிப்பை நிறுத்தி வைத்து பயங்கரமான அச்சத்தில் விட்டு விட்ட அந்த நேரத்திலும் கோழைத்தனத்தைக் காட்டாதிருப்பதாகும். கோழையர்களைப் போன்று பின் வாங்காதிருப்பதாகும். நன்றியுணர்வின் பண்பில் எந்தவொரு தடையையும் உருவாக்காதிருப்பதாகும். உண்மையிலும் உறுதித்தன்மையிலும் எந்த விதமான இடையூறையும் ஏற்படுத்தாதிருப்பதாகும். இழிவு ஏற்பட்டாலும் மகிழ்ச்சி அடைவதாகும்; மரணம் ஏற்பட்டாலும் மகிழ்ச்சி அடைவதாகும். மேலும் உறுதியாக நிலைபெற்றிருப்பதற்கு எந்தவொரு நண்பரையும் - அவர் ஆதரவு தருவார் என எதிர்பார்க்காதிருப்பதாகும்.''

எனவே இந்த நிலைமையைத் தான் நம்மில் ஒவ்வொருவரும் பெற முயற்சி செய்ய வேண்டும். மேலும் இது இறைவனின் அருள் இல்லாமல் கிடைக்க முடியாது. மனிதன் எந்த தியாகத்திற்கும் ஆயத்தமாகி விடும் இந்த நிலையை அடைந்து விட்டால் பிறகு அல்லாஹ் தன் அடியாரை கைவிடுவதில்லை. அவன் முன் வந்து தாங்கிப் பிடிக்கின்றான். அதனால்தானே சுவர்க்கத்திற்கான வாக்குறுதியையும் வழங்குகிறான்! எனவே அதில் உறுதியாக நிலைபெற்றிருப்பதற்கான துஆவையும் கற்றுத் தந்துள்ளான். எதிரிகளின் மீது வெற்றி கிடைப்பதற்கான துஆவையும் கற்றுத் தந்துள்ளான். இதன் கருத்து, அல்லாஹ் அந்த துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு, எந்த அளவுக்கு வெற்றிகளின் வாசல்களை திறப்பான் என்றால், பிறகு எதிரிகளுக்கு வெறுண்டோடுவதற்கு எந்த இடமும் இருக்காது. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த கடைசி வெற்றி பற்றிய வாக்குறுதிகள் கண்டிப்பாக நிறைவேறும் - இன்ஷாஅல்லாஹ். மேலும் கடைசி வெற்றி நமக்குத்தான் கிடைக்கும்.

**தியாகங்களின் இந்த சம்பவங்களை எழுதுபவர்களில் - அல்லாஹ்வின் புறமிருந்து சுவர்க்கத்தின் நற்செய்தி கிடைக்கப்பெறுபவர்களில் இன்று நமது ஒரு சகோதரர் இணைந்துள்ளார். அவர் ஜனாப் ஃபதஹ் முஹம்மது சாஹிப் அவர்களின் மகன் ஜனாப் கலீல் அஹ்மது சாஹிப் ஆவார்கள்.** (பாகிஸ்தானிலுள்ள) ஷேக்பூரா மாவட்டத்தைச் சேர்ந்த இவரை 16 மே 2014 அன்று ஷஹீதாக்கி விட்டனர். **இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.** நடந்த சம்பவம் என்னவென்றால், 13, மே 2014 அன்று எதிரிகள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிரான ஸ்டிக்கர்களை கிராமங்களில் ஒட்டிருந்தனர். அதனை அகற்றியதன் காரணமாக பிரச்சினை உருவானது. இந்த சம்பவத்தை சாக்காகக் கொண்டு எதிரிகள் ஷேக்பூராவில் பேரணி நடத்தினர். ஒலிபெருக்கியில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக வெறியைத் தூண்டும் பேச்சுக்களைப் பேசினர். மேலும் போக்குவரத்தை தடை செய்து வழக்குப் பதிவு செய்யுமாறு காவல்துறையை வற்புறுத்தினர். அதனால் காவல்துறையினர் முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப், குலாம் அஹ்மது சாஹிப், கலீல் அஹ்மது சாஹிப், இஹ்ஸான் அஹ்மது சாஹிப் ஆகியோருக்கெதிராக வழக்கு பதிவு செய்தனர். மேற்குறிப்பிட்டவர்களில் கலீல் அஹ்மது சாஹிப் அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட சில உறவினர்களும் **FIR** வழக்குப் பதிவு செய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டனர். வழக்குப் பதிவு செய்யப்பட்ட பிறகு ஜாமீனுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மேலும் கலீல் சாஹிப் அவர்களை ஜாமீனில் எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருந்தபோதே 16 மே 2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு சலீம் என்ற பெயரைக் கொண்ட ஓர் இளைஞர் வந்து நான் அருகிலுள்ள கிராமத்தைச் சார்ந்தவன். கலீல் சாஹிப் அவர்களுக்கு உணவு கொண்டு வந்திருக்கின்றேன் எனக் கூறியவாறு உள்ளே நுழைந்தார். கலீல் சாஹிப் யார் எனக் கேட்டார். சுட்டிக்காட்டப்பட்டதும் **துப்பாக்கியை எடுத்து கலீல் சாஹிப் அவர்களின் முகத்தில் சுட்டார். அதனால் அவர் கடுமையாக காயமுற்றார்.** கொலைகாரன் மற்ற அஹ்மதி சிறைவாசிகளையும் கொல்ல முயன்றான். ஆனால் துப்பாக்கி அப்போது சுடவில்லை. குண்டு சிக்கிக் கொண்டிருந்தது. காவல்துறையினர் குற்றவாளியை சிறைப்பிடித்து விட்டனர். கலீல் சாஹிப் அவர்களை சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்தனர். ஆனால் **அதற்குள் அவர்கள் ஷஹாதத்தின் பானத்தை அன்னார் அருந்தி விட்டார்கள்.** இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***